கலைஞர் 100
1924 - 2023

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி:30.05.2024

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு சொட்டு நீர் வடிவமைப்பு சோதனை மென்பொருள் உருவாக்கியதிற்கான பதிப்புரிமை**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் சொட்டு நீர் வடிவமைப்பு சோதனை மென்பொருள் உருவாக்கியதிற்கான பதிப்புரிமையை புது டில்லி பதிப்புரிமை அலுவலக பதிப்புரிமைப் பாதிவாளரிடமிருந்து பெற்றது.

சொட்டுநீர் வடிவமைப்பு சோதனை மென்பொருள், விவசாயிகள் மற்றும் பொறியாளர்களுக்கு திறமையான சொட்டு நீர் பாசன முறைகளை வடிவமைக்க வழிவகை செய்கிறது. இது தண்ணீரை சேமிப்பதற்கும், தண்ணீர் பற்றாக்குறை சூழ்நிலைகளை நிர்வகிப்பதற்கும் இன்றியமையாதது. சொட்டுநீர் கருவிகள் மூலம் நேரடியாக பயிரின் வேர் மண்டலத்திற்கு நீர் சொட்டுகளாக வெளியேற்றுவதன் மூலம், இந்த முறை நீர் மற்றும் ஆற்றல் இழப்பைக் குறைக்கிறது, அதே நேரத்தில் தொழிலாளர் செலவைக் குறைக்கிறது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் வெ.கீதாலட்சுமி அவர்கள் 29.05.24 அன்று முதுநிலை பட்ட மேற்படிப்பு பயிலக முதன்மையர் முனைவர் ந.செந்தில் மற்றும் வேளாண் பொறியியல் கல்லூரியின் முதன்மையர் முனைவர் அ.ரவிராஜ் அவர்கள் முன்னிலையில், சொட்டு நீர் வடிவமைப்பு சோதனை மென்பொருள் உருவாக்கியதிற்கான பதிப்புரிமைச் சான்றிதழை உருவாக்கியவர்களுக்கு வழங்கி கௌரவித்தார்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**